# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 199/பேரூ/2024**

**நாள்: 23 .04.2025**

திரு. M. முகம்மது தாவூது — முறையீட்டு மனுதாரர்
முத்துப்பேட்டை
திருவாரூர் மாவட்டம்

செயல் அலுவலர் — எதிர்மனுதாரர்
முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி,
திருவாரூர் மாவட்டம்

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை வட்டம், கோவிலான்தோப்பு, எண் 3/1 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M. முகம்மது தாவூது என்பவரின் 24.10.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.10.2024 அன்று பெறப்பட்டு 199/பேரூ/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை வட்டம், கோவிலான்தோப்பு, எண் 3/1 என்ற முகவரியைச் சேர்ந்த திரு. M. முகம்மது தாவூது என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

1. சலான் நெ.283 தேதி. 28/03/2024 Code No:4047 பொது நிதி திட்டம் 2023 – 2024 வார்டு எண்:16 கோவிலான்தோப்பு சாலை தார்சாலை அமைத்ததாக கூறி தொகை ரூ.9,31,338.00 (கையாடல் செய்தது) தார்சாலை அமையப்படவில்லை.
2. சலான் நெ.303 தேதி. 28/03/2024 Code No:4047 பொது நிதி திட்டம் 2023 – 2024 வார்டு எண்:14 பூக்கொல்லை முதல் பி.ஆர்.எம் திமலத் தெரு வரை ஆர்.சி.சி. பைப் வடிகால் அமைத்ததாக கூறி ரூ.8,49,342.00 (கையாடல் செய்தது) ஆர்.சி.சி. பைப் வடிகால் அமைக்கப்படவில்லை.

3. சலான் நெ.309 தேதி. 28/03/2024 Code No:4047 பொது நிதி திட்டம் 2023 – 2024 வார்டு எண்:11 ஊமக்கொல்லை முதல் செம்படவன்காடு பெருமாள்கோவில் வரை தார்சாலை அமைத்ததாக கூறி தொகை ரூ.18,17,212.00 (கையாடல் செய்தது) தார்சாலை அமைக்கப்படவில்லை.

4. சலான் நெ.310 தேதி. 28/03/2024 Code No:4047 பொது நிதி திட்டம் 2023 – 2024 வார்டு எண்:16 அரசகுளம் முதல் ஜமாலியா கார்டன் வரை தார்சாலை அமைத்ததாக கூறி தொகை ரூ.18,26,234.00 (கையாடல் செய்தது) தார்சாலை அமையப்படவில்லை.

5. கடந்த 29.02.2024 அன்று முத்துப்பேட்டை பேரூராட்சியில் செயல் அலுவலர் திரு. J. முகமது இப்ராஹிம் என்பவரால் அரசர்குளம் சர்வே எண்.243–ல் 6 வீடுகளும் மற்றும் எதிர்புறம் உள்ள வீடுகளில் 8 வீடுகளில் உள்ள காம்பவுண்டு சுவர்களும் 1 வார காலத்திற்குள் போலியான ஆவணங்கள் தயார்செய்து ரூ.26,84,434/– தொகையை முறைகேடாக பணம் எடுக்கப்பட்டு அரசுக்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். மேலும் செலவு ஆவணத்தில் கண்டுள்ள செலவுகளை தாங்கள் நேரில் ஆய்வு செய்ய வேண்டும்.'' எனத் தெரிவித்துள்ளார்.

மேலே கண்ட ஐந்து குற்றச்சாட்டுகளின் மனுவின்படி

1. முத்துப்பேட்டை பேரூராட்சி மன்ற செயல் அலுவலர் திரு. J. முகமது இப்ராஹீம்.
2. இவருக்கு துணை நின்று செயல்பட்ட அதிகாரி அனைத்து பேரூராட்சிகளின் இயக்குநர், தஞ்சாவூர் திரு. மாகின் அபூபக்கர் அவர்களும்,
3. மேற்கண்ட நபர் திரு. J. முகமது இப்ராஹிமுக்கு சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அலுவலகத்தில் சிறப்புநிலை செயல் அலுவலராகப் பணிபுரியும் திரு. டெல்லிபாபு அவர்களும் மற்றும் பேரூராட்சி அலுவலகங்களில் பணியாற்றி வரும், தார் சாலை பணிக்கு திட்ட மதிப்பீடு வரைபடங்களுடன் தயார் செய்து கொடுத்து பல கோடிக்கு அரசுப் பணத்தை மோசடி செய்ய உறுதுணையாய் இருந்த அரசு பொறியாளர் திரு. கோபி ஆகிய அரசு அதிகாரிகள் 4 பேர் மீதும் உரிய அரசு நடவடிக்கை எடுக்கவும், மற்றும் அரசுப்பணி ஒப்பந்ததாரர் திரு. P. சிவக்குமார் இவர் மீதும், திட்டமிட்டு கூட்டுசேர்த்து ஒரே மாதத்தில் அரசுப்பணத்தை சதித்திட்டம் தீட்டி கையாடல் செய்து மோசடி செய்த அரசு அதிகாரிகள் நான்குபேர் மீதும் அதற்கு துணைபோன ஒப்பந்ததாரர் மீதும் அரசு துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் எனது சார்பாகவும், பொது மக்கள் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குண்டான சாட்சி.

1. 28.03.2024–ல் பேரூராட்சி வங்கி காசோலை மூலமாக பணம் எடுக்கப்பட்டுள்ளது.
2. பேரூராட்சி மன்ற கூட்டத்தில் மன்ற உறுப்பினர்கள் மேலே குறிப்பிட்ட தொகைகளை எடுப்பதற்கு மன்ற கூட்டத்தில் ஒப்புதலுக்காக வைக்கப்படவில்லை. அதற்கு 19 வார்டு கவுன்சிலர்களும் ஒப்புதல் அளிக்கப்படவில்லை என்பதை இதன் மூலம் சாட்சியமாக தெரியப்படுத்திக் கொள்கிறேன்.
3. முத்துப்பேட்டை J. முகமது இப்ராஹீம் அவர்கள் செயல் அலுவலராக பொறுப்பேற்ற நாட்களில் இருந்து அவர் பணியை விட்டு மாறுதலாக சென்ற நாட்கள் வரை உள்ள ஆவணங்களை ஆய்வு செய்தால் இன்னும் பலகோடி ரூபாய்கள் கையாடல் செய்தது

தெரிய வரும். இந்த மோசடி செய்ததை முழுமையாக நம்புகிறேன். தாங்கள் ஆய்வில் உண்மை தெரியும்.'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.11.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 21.11.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

''திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டை வருவாய் கிராமம் புல எண்.247/0 பரப்பு 1.32.00 ஹெக்டேர் செக்கடிக்குளம் மற்றும் புல எண்.230/0 பரப்பு 0.28.00 ஹெக்டேர் செக்கடிக்குளம் ஓடை ஆகியவற்றில் 0.12.63 ஹெக்டேர் நீர்நிலை புறம்போக்கில் பல்வேறு நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி திரு. முகம்மது மாலிக் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு WP No.3438/2016–ல் தொடர்ந்தார். மேற்படி சென்னை உயர்நீதி மன்றம் ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி வரப்பெற்ற தீர்வின்படி ஆக்கிரமிப்புகளை பொதுமக்கள் தாங்களாகவே அகற்றி கொள்ள 4/2/2024 அன்று கதவு நோட்டீஸ் ஒட்டப்பட்டது. ஆக்கிரமிப்பு அகற்றப்படாததால் உரிய காவல் துறை பாதுகாப்புடன் வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் முன்னிலையில் 11/2/2024 அன்று ஆக்கிரமிப்பு உரிய வழி முறையின்படி அகற்றப்பட்டது.

சென்னை உயர்நீதிமன்ற டபுள்யூ.பி. எண்.20965/2018 மற்றும் 20964/2018 தீர்ப்பின்படி புல எண் 243 அரசக்குளம் நீர்நிலை புறம்போக்கில் ஆக்கிரமிப்பு அகற்றுவதற்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் உத்திரவு ந.க.எண். 296/2024/பேரூ.3/ நாள் 27.02.2024–ன்படி திருவாரூர் மாவட்ட பேரூராட்சிகளிடமிருந்து பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டது. இதில் 6 வீடுகள், 5 கடைகள் மற்றும் சுற்றுச் சுவர்கள் அடங்கும். இதற்கு ஆகும் செலவினத் தொகையினை பேரூராட்சியின் பொதுநிதியில் செலவு செய்திட மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் தீர்மான எண் 203/2023/ நாள் 30.11.2023ன்படி அவசர அவசியம் கருதி 27.02.2024 அன்று கனரக இயந்திரங்கள் மற்றும் டிப்பருடன் கூடிய டிராக்டர், வீடியோ கேமரா, போட்டோ, மின்விளக்கு வசதிகள், ஜெனரேட்டர், டாடா ஏசி ஆகியவவை உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேற்கண்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட செலவினங்களுக்கு பட்டியல் அனுமதி கோரி பேரூராட்சி அலுவலக ந.க. எண்452/2021 நாள் 05.03.2024, 06.03.2024, 18.03.2024–ன்படி உதவி இயக்குநர் பேரூராட்சிகள், தஞ்சாவூர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

<u>இளநிலை பொறியாளர் அளித்த விளக்கம்:–</u>

<u>செம்படவன்காடு வார்டு எண். 11–ல் ஊமக்கொல்லை முதல் செம்படவன்காடு பெருமாள் கோவில் வரை தார்சாலை போடப்பட்டதென போலியான போடப்படாத சாலைக்கு பணிகள் செய்ததாக ரூ.18,17,212/– செலவு செய்தது:–</u>

புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு 2023–24 பொதுநிதியின் கீழ் பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.231/28.12.2023–ன்படி தீர்மானம் ஏற்றப்பட்டு பேரூராட்சி அலுவலக ந.க. எண்.20/2024/அ1(16) நாள் 12.01.2024–ன்படி தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி

இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் மூ.மு. எண்.368/2024/பேரூ.1/ நாள் 01.02.2024ன்படி ஐந்து பணிகள் தேர்வு செய்யப்பட்டு மொத்தம் ரூ.61.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதில் இப்பணிக்கு பேரூராட்சிகளின் தஞ்சாவூர் மண்டல திருவாரூர் மாவட்ட உதவி செயற்பொறியாளர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி எண்.328/2024 நாள் 02.02.2024–ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 05.02.2024ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து 21.02.2024ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சாலை வார்டு எண்.16 மற்றும் 11–ஐ உள்ளடக்கிய 876 மீ. நீளம் உள்ளதாகும். எனவே மேற்கண்ட வார்டு 11ற்கு 270 மீட்டர் நீளத்திற்கு மட்டுமே மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. ஆனால் மேற்கண்ட வார்டில் கிழக்கிலிருந்து மேற்காக 255 மீட்டர் நீளத்திற்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட புகார் மனுவில் கூறப்பட்டது உண்மைக்கு புறம்பானது என பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>வார்டு எண்.16ல் அரசர்குளம் முதல் ஜமாலியா கார்டன் வரை தார்சாலை அமைத்ததாக ரூ.18,26,234/– செலவு செய்தது:–</u>

புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு 2023–24 பொதுநிதியின் கீழ் பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.231/28.12.2023–ன்படி தீர்மானம் ஏற்றப்பட்டு பேரூராட்சி அலுவலக ந.க. எண்.20/2024/அ1(16) நாள் 12.01.2024–ன்படி தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் மூ.மு. எண்.368/2024/பேரூ.1/ நாள் 01.02.2024ன்படி ஐந்து பணிகள் தேர்வு செய்யப்பட்டு மொத்தம் ரூ.61.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதில் இப்பணிக்கு பேரூராட்சிகளின் தஞ்சாவூர் மண்டல திருவாரூர் மாவட்ட உதவி செயற்பொறியாளர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி எண்.327/2024 நாள் 02.02.2024–ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 05.02.2024ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து 21.02.2024ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சாலை பேட்டை சாலை முதல் செம்படவன்காடு வரை உள்ள இணைப்பு சாலை ஆகும். வார்டு எண்.16–ல் உள்ள அரசர்குளம் முதல் ஜமாலியா கார்டன் (நகர் ஊரமைப்புத் துறையால் அங்கீகரிக்கப்பட்டு ரத்து செய்யப்பட்ட வீட்டுமனைப் பிரிவு) வரை உள்ள சாலை 358 மீட்டர் நீளத்திற்கு தார்சாலை பணி செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. மேலும் 11–ல் பெருமாள்கோவில் இணைப்பு சாலை வரை 263 மீட்டர் நீளத்திற்கு சாலை அமைக்கப்பட வேண்டியுள்ளது என்ற விபரமும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கோவிலான்தோப்பு வார்டு எண்.16 இல் தார்சாலை அமைத்ததாக ரூ.931338/– செலவு செய்தது:–</u>

இச்சாலையானது ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள கிழக்கிலிருந்து மேற்கு சாலையிலிருந்து கோவிலான்தோப்பு பகுதியில் வடக்கிலிருந்து தெற்காக குறுக்கு சந்தில் 174 மீ. நீளத்திற்கு தார் சாலை புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

<u>பூக்கொல்லை முதல் பி.ஆர்.எம். திமிலத்தெரு வார்டு எண்.14ல் (RCC பைப் வடிகால்) மற்றும் தார்சாலை போடப்பட்டதாக தெரிவித்து ரூ.8,49,342/– செலவு செய்தது:–</u>

புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு 2023–24 பொதுநிதியின் கீழ் பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.11/31.01.2024ன்படி தீர்மானம் ஏற்றப்பட்டு பேரூராட்சி அலுவலக ந.க.எண்.20/2024/அ1. நாள் 01.02.2024–ன்படி தஞ்சாவூர் மண்டல

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் மூ.மு. எண்.580/2024/பேரூ.1 நாள் 13.02.2024–ன்படி இரண்டு பணிகள் தேர்வு செய்யப்பட்டு மொத்தம் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

அதில் இப்பணிக்கு பேரூராட்சிகளின் தஞ்சாவூர் மண்டல திருவாரூர் மாவட்ட உதவி செயற்பொறியாளர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதி எண்.357/2024/ நாள்13.02.2024–ன்படி தொகை ரூ.9.20 இலட்சத்திற்கு 270 மீட்டர் நீளத்திற்கு RCC குழாய் வடிகால் மற்றும் 9 கழிவுநீர் தொட்டி அமைக்க மட்டுமே தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 19.02.2024ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்து 05.03.2024ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்காணும் பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநரின் கடிதத்தின் வழி பெறப்பட்ட மனுவிற்கு மேற்காணும் குறிப்புகள் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. மேலும் இப்பணியானது அலுவலக பணியாளர்கள், வருவாய் அலுவலர்கள் மற்றும் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன் முழுமையாக செய்து முடிக்கப்பட்டது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 06.02.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. எம். முகமது தாவூது என்பவர் 06.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

"திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ், பேரூராட்சி மன்ற ஒப்புதல் இன்றி கீழ்க்காணும் சாலைகளுக்கு தார்சாலைகள்/வடிகால் அமைக்காமல், போலியான ஆவணங்கள் மூலம் தார்சாலைகள்/வடிகால் அமைத்ததாக பேரூராட்சியின் நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| (i) | <u>வார்டு எண்.11:- (தார்சாலை)</u><br>ஊமக்கொல்லை முதல் செம்படவன்காடு பெருமாள் கோவில் தெரு சாலை அமைத்ததாக கையாடல் | ரூ.<br>18,17,212/– |
| (ii) | <u>வார்டு எண்.16:- (தார்சாலை)</u><br>கோவிலான் தோப்பு சாலையில் தார்சாலை அமைத்ததாக கையாடல் | 9,31,338/– |
| (iii) | <u>வார்டு எண்.16:- (தார்சாலை)</u><br>அரசகுளம் முதல் ஜமாலியா கார்டன் வரை தார்சாலை அமைத்ததாக கையாடல் | 18,26,234/– |
| (iv) | <u>வார்டு எண்.14:- (RCC பைப் வடிகால்)</u><br>பூக்கொல்லை முதல் பி.ஆர்.எம். திமிலத் தெரு வரை RCC pipe வடிகால் அமைத்ததாக கையாடல் | 8,49,342/– |

➢ மேற்காணும் தொகைக்கு பேரூராட்சியில் பணம் எடுக்கப்பட்டுள்ளது. எனவே, இம்முறைகேடு தொடர்புடைய அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பி. கங்காதரன் மற்றும் இளநிலை உதவியாளர் திரு. எம். செல்வராஜன் ஆகியோர் 06.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை அளித்தனர்:

"திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட 1) ஊமக்கொல்லை முதல் செம்படவன்காடு பெருமாள் கோவில் தெரு சாலை வரையிலும், 2) கோவிலான் தோப்பு சாலையில் தார்சாலை அமைக்கவும், 3) அரசகுளம் முதல் ஜமாலியா கார்டன் வரையிலும் தார் சாலைகள் அமைக்கவும் மற்றும் 4) பூக்கொல்லை முதல் பி.ஆர்.எம். திமிலத் தெரு வரை RCC pipe வடிகால் அமைப்பதற்கும் உரிய பேரூராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உதவி இயக்குநரின் நடவடிக்கை ஆணை மற்றும் திருவாரூர் மாவட்ட உதவி செயற்பொறியாளரின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது. இருப்பினும், மனுதாரரின் புகார் குறித்து நேரடி கள ஆய்வு செய்து உரிய ஆவணங்களுடன் விரிவான தகவல்கள் அளிக்கும் வகையில் பிரிதொரு நாளில் விசாரணைக்கு அனுமதி வழங்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்." என தெரிவித்துள்ளனர்.

7. எனவே மேற்கண்ட எதிர்மனுதாரரான முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் 06.02.2025 அன்றைய விசாரணையின் போது மனுதாரரின் புகார் குறித்து நேரடி கள ஆய்வு செய்து உரிய ஆவணங்களுடன் விரிவான தகவல்கள் அளிக்கும் வகையில் பிரிதொரு நாளில் விசாரணைக்கு அனுமதி வழங்க கோரியதின் அடிப்படையில் மனுதாரர் திரு. M. முகம்மது தாவூது என்பவரின் 24.10.2024 நாளிட்ட மனு சம்பந்தமாக மீண்டும் 27.02.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலருக்கு 18.02.2025 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

8. எதிர்மனுதாரர் திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் பி. கங்காதரன் மற்றும் முன்னாள் முத்துப்பேட்டை பேரூராட்சி இளநிலை பொறியாளர் தற்போது தென்காசி மாவட்டம் வடகரைகீழ்பிடாகை பேரூராட்சி இளநிலை பொறியாளராக பணிபுரியும் திரு. கு. கோபி ஆகியோர் 27.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை அளித்தனர்:

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சியின் கீழ்

I. வார்டு எண்.11–ல் கிழக்கிலிருந்து மேற்காக 255 மீட்டர் நீளத்திற்கு ரூ.18,17,212/– மதிப்பீட்டில் தார் சாலை அமைத்தது குறித்து:

மேற்கண்ட வார்டில் குறிப்பிட்டுள்ள சாலை சுமார் 518 மீட்டர் நீளமுள்ள சாலையாகும். அதில் நிர்வாக அனுமதி ரூ.19.90 இலட்சம் மட்டும் தார் சாலை அமைக்க அளிக்கப்பட்டுள்ளது. தார் சாலை அமைக்க தொகை மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கேற்றவாறு பழுதடைந்த பகுதிக்கு மட்டும் தார் சாலை அமைக்கப்பட்டது. எனவே, மேற்கண்ட வார்டில் நிர்வாக

அனுமதி வழங்கப்பட்ட காலத்தில் உள்ள பழுதடைந்த பகுதியில் உள்ள 255 மீட்டர் நீளத்திற்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது விடுபட்டுள்ள சுமார் 60 மீட்டர் நீளத்திற்கு பழுதடைந்த பகுதியினை இனிவருங்காலங்களில் நிதிநிலைமைக்கு ஏற்ப சீரமைக்க பரிந்துரை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள 203 மீட்டர் நீளமுள்ள சாலை சிமெண்ட் சாலையாக நல்ல நிலைமையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

II. வார்டு எண்.16–ல் கோவிலான் தோப்பு பகுதியில் வடக்கிலிருந்து தெற்காக குறுக்கு சந்தில் 174 மீட்டர் நீளத்திற்கு 9,31,338/– மதிப்பீட்டில் தார்சாலையும்

III. வார்டு எண்.16–ல் அரசகுளம் முதல் ஜமாலியா கார்டன் வரை உள்ள 358 மீட்டர் நீளத்திற்கு 18,26,234/–மதிப்பீட்டில் தார்சாலையும் அமைக்கப்பட்டன.

IV. வார்டு எண்.14–ல் 270 மீட்டர் நீளத்திற்கு ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் RCC குழாய் வடிகால் ஒப்பந்தப்புள்ளி மூலம் அமைக்கப்பட்டது.

மேற்காணும் நான்கு பணிகளுக்கும், பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நடவடிக்கை மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேலும் தஞ்சாவூர் மண்டல திருவாரூர் மாவட்ட உதவி செயற்பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மேற்கண்ட சாலைகள் மற்றும் குழாய் வடிகால் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்திற்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.'' என தெரிவித்துள்ளனர்.

9. மேலும், எதிர்மனுதாரர் திருவாரூர் மாவட்டம், முன்னாள் முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தற்போது நீலகிரி மாவட்டம் கோத்தகிரி சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவராக பணிபுரியும் ஜெ. முகம்மது இப்ராஹிம் என்பவர் 27.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P. No.20965/2018 மற்றும் 20964/2018–ல் வழங்கப்பட்ட தீர்ப்புரையின்படி முத்துப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.243 அரசக்குளம் நீர்நிலை புறம்போக்கில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.296/2024/பேரூ.3 நாள் 27.02.2024–ன்படி 6 வீடுகள், 5 கடைகள் மற்றும் சுற்றுச்சுவர்கள் அகற்றிட திருவாரூர் மாவட்ட பேரூராட்சிகளின் பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

- இதற்கான செலவினத்தை பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள பேரூராட்சி மன்றத்தில் தீர்மான எண்.203/2023 நாள் 30.11.2023–ன்படி, அவசர அவசியம் கருதி 27.02.2024 அன்று கனரக இயந்திரங்கள், டிராக்டர், வீடியோ கேமரா, மின்விளக்கு வசதிகள், ஜெனரேட்டர் ஆகியவை உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மொத்தம் ரூ.22,52,383/– செலவினத்தில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன.

- மேற்காணும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வீடுகளில் புகார் மனுதாரர் திரு. முகம்மது தாவூது என்பவரின் வீடும் அடங்கியுள்ளதால், அவரது ஆக்கிரமிப்பு வீடும்

அகற்றப்பட்டதால், காழ்ப்புணர்ச்சியின் காரணமாக மேற்கண்ட புகாரினை பேரூராட்சிக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் புகார் மனுவினை வேண்டுமென்றே இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

- மேலும், புகார் மனுவில் தெரிவித்துள்ள மூன்று தார் சாலை பணிகளும், ஒரு குழாய் வடிகால் பணியும் உரிய பேரூராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, நல்லமுறையில் பணி செய்து முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

- மனுதாரரின் ஆக்கிரமிப்பு வீட்டினை அகற்றியதால், மாற்று இடம் கோரி மனுதாரரான திரு. முகம்மது தாவூது என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். அவ்வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

10. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம், முன்னாள் முத்துப்பேட்டை பேரூராட்சி இளநிலை பொறியாளர் தற்போது தென்காசி மாவட்டம் வடகரைகீழ்பிடாகை பேரூராட்சி இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் முன்னாள் முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தற்போது நீலகிரி மாவட்டம் கோத்தகிரி சிறப்புநிலை பேரூராட்சி செயல்அலுவலர் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. எம். முகமது தாவூது என்பவர் தனது 2410.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சியில் 2023–24 ஆம் ஆண்டு பொது நிதி திட்டத்தின் கீழ்,

(i) வார்டு எண் 11ல் ஊமக்கொல்லை முதல் செம்படவன்காடு பெருமாள் கோவில் தெரு வரை தார் சாலை அமைக்காமல், போலிச்சான்று மூலம் சாலை அமைத்ததாக ரூ.18,17,212/– கையாடல் செய்துள்ளனர்.
(ii) வார்டு எண் 16ல் கோவிலான் தோப்பு சாலையில் தார் சாலை அமைத்ததாக ரூ.9,31,338/– கையாடல் செய்துள்ளனர்.
(iii) வார்டு எண் 16ல் அரசகுளம் முதல் ஜமாலியா கார்டன் வரை தார் சாலை அமைத்ததாக ரூ.18,26,234/– கையாடல் செய்துள்ளனர்.

மேலும் (iv) வார்டு எண்.14ல் பூக்கொல்லை முதல் பி.ஆர்.எம். திமிலத் தெரு வரை RCC பைப் வடிகால் அமைத்ததாக ரூ.8,49,342/– கையாடல் செய்துள்ளனர்.
தவிர, அரசகுளம் புல எண் 243–ல் 6 வீடுகளும் மற்றும் எதிர்புறம் உள்ள 8 வீடுகளில் காம்பவுண்டு சுவர்களும் 1 வாரத்திற்குள் இடிக்கப்பட்டு ரூ.26,84,434/– என கையாடல் செய்துள்ளனர்.

மேற்காணும் பணிகளுக்கு பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்படாமல், பேரூராட்சி வங்கி காசோலை மூலம் பணம் எடுக்கப்பட்டுள்ளதாக புகார் தெரிவித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

வார்டு எண்11ல் குறிப்பிட்டுள்ள ஊமக்கொல்லை முதல் செம்டவன்காடு பெருமாள் கோவில் சாலையானது சுமார் 518 மீட்டர் நீளமுள்ள சாலையாகும். அதில் நிர்வாக அனுமதி ரூ.19.90 இலட்சம் மட்டும் தார் சாலை அமைக்க அளிக்கப்பட்டுள்ளது. தார் சாலையினை அமைக்க தொகை மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கேற்றவாறு பழுதடைந்த பகுதிக்கு மட்டும் தார்

சாலை அமைக்கப்பட்டது. எனவே, மேற்கண்ட வார்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட காலத்தில் உள்ள பழுதடைந்த பகுதியில் உள்ள 255 மீட்டர் நீளத்திற்கு சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது விடுபட்டுள்ள சுமார் 60 மீட்டர் நீளத்திற்கு பழுதடைந்த பகுதியினை இனிவருங்காலங்களில் நிதிநிலைமைக்கு ஏற்ப சீரமைக்க பரிந்துரை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும், மீதமுள்ள 203 மீட்டர் நீளமுள்ள சாலை சிமெண்ட் சாலையாக நல்ல நிலைமையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதையும், வார்டு எண் 16–ல் கோவிலான் தோப்பு பகுதியில் வடக்கிலிருந்து தெற்காக குறுக்கு சந்தில் 174 மீட்டர் நீளத்திற்கு ரூ.9,31,338/– மதிப்பீட்டில் தார்சாலையும் மற்றும் வார்டு எண்.16–ல் அரசகுளம் முதல் ஜமாலியா கார்டன் வரை உள்ள 358 மீட்டர் நீளத்திற்கு ரூ.18,26,234/–மதிப்பீட்டில் தார்சாலையும் அமைக்கப்பட்டன என்பதையும் தவிர, வார்டு எண்.14–ல் 270 மீட்டர் நீளத்திற்கு ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் RCC குழாய் வடிகால் ஒப்பந்தப்புள்ளி மூலம் அமைக்கப்பட்டது என்பதையும் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முன்னாள் பேரூராட்சி இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் மூலமாக தெரிய வருகிறது.

மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவிக்கும் 3 தார் சாலைகள் அமைக்கும் பணிகளுக்கும் மற்றும் 1 RCC பைப் வடிகால் அமைக்கப்பட்ட பணி ஆகிய 4 பணிகளுக்கும் முறையாக பேரூராட்சி மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் நடவடிக்கை மூலம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டும், அதனைத் தொடர்ந்து தஞ்சாவூர் மண்டல திருவாரூர் மாவட்ட உதவி செயற்பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டும், ஒப்பந்தப்புள்ளி மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை, பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முன்னாள் முத்துப்பேட்டை பேரூராட்சி இளநிலை பொறியாளர் (தற்போது தென்காசி மாவட்டம், வடகரைக்கீழ்பிடாகை பேரூராட்சி இளநிலை பொறியாளர்) ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P. No.20965/2018 மற்றும் 20964/2018–ல் வழங்கப்பட்ட தீர்ப்புரையின்படி முத்துப்பேட்டை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.243 அரசக்குளம் நீர்நிலை புறம்போக்கில் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.296/2024/பேரூ.3 நாள் 27.02.2024–ன்படி 6 வீடுகள், 5 கடைகள் மற்றும் சுற்றுச்சுவர்கள் அகற்றிட திருவாரூர் மாவட்ட பேரூராட்சிகளின் பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, இதற்கான செலவினத்தை பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள பேரூராட்சி மன்றத்தில் தீர்மான எண்.203/2023 நாள் 30.11.2023–ன்படி, அவசர அவசியம் கருதி 27.02.2024 அன்று கனரக இயந்திரங்கள், டிராக்டர், வீடியோ கேமரா, மின்விளக்கு வசதிகள், ஜெனரேட்டர் ஆகியவை உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மொத்தம் ரூ.22,52,383/– செலவினத்தில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன என்பதையும் முன்னாள் முத்துப்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும், மேற்காணும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வீடுகளில் புகார் மனுதாரர் திரு. முகம்மது தாவூது என்பவரின் வீடும் அடங்கியுள்ளதால், அவரது ஆக்கிரமிப்பு வீடும் அகற்றப்பட்டதால், காழ்ப்புணர்ச்சியின் காரணமாக மேற்கண்ட புகாரினை பேரூராட்சிக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் களங்கம் விளைவிக்கும் வகையில் புகார் மனுவினை வேண்டுமென்றே இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்பித்துள்ளார் என்பதையும் முன்னாள் முத்துப்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

இருப்பினும், முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11–ல் ரூ.19.90 இலட்சம் மதிப்பீட்டிலும், வார்டு எண் 16–ல் கோவிலான் தோப்பு பகுதியில் ரூ.8,49,342/–

மதிப்பீட்டிலும் மற்றும் அரசகுளம் முதல் ஜமாலியா கார்டன் வரை ரூ.18,26,234/– மதிப்பீட்டில் தார் சாலைகள் அமைக்கப்பட்டதிலும் மற்றும் வார்டு எண் 14–ல் ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் RCC பைப் வடிகால் அமைக்கப்பட்டதிலும் மனுதாரர் தெரிவிக்கும் புகாரின் உண்மை நிலையை கண்டறிந்து உறுதி செய்திடும் வகையில் பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர் தலைமையில் ஒரு குழுவினை அமைத்து, இதுகுறித்து விசாரணை செய்து, அதன் அறிக்கையினை 3 மாத காலத்திற்குள் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி வார்டு எண்.11ல் செம்படவன்காடு பெருமாள் கோவில் தெருவில் தற்போது விடப்பட்டுள்ள சுமார் 60 மீட்டர் நீளத்திற்கு பழுதடைந்த பகுதியினை சீரமைத்து தார் சாலை அமைக்க உரிய துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. எம். முகம்மது தாவூது,
3/1, கோவிலான்தோப்பு,
முத்துப்பேட்டை வட்டம்,
திருவாரூர் மாவட்டம்.
2) செயல் அலுவலர், முத்துப்பேட்டை தேர்வு நிலை பேரூராட்சி,
திருவாரூர் மாவட்டம்.
3) முன்னாள் செயல் அலுவலர்,
முத்துப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி,
தற்போது செயல் அலுவலர்,
கோத்தகிரி சிறப்புநிலை பேரூராட்சி,
நீலகிரி மாவட்டம்.
4) முன்னாள் இளநிலை பொறியாளர்,
முத்துப்பேட்டை பேரூராட்சி,
தற்போது இளநிலை பொறியாளர்,
வடகரைகீழ்பிடாகை பேரூராட்சி,
தென்காசி மாவட்டம்
5) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

6) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.